**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.121/2015**

**வழக்கு சாட்சி: PW.9**

**தேதி: 10.10.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **தேவராஜ்** | **ஜாதி:** | **வெள்ளாளர்** |
| **தந்தை பெயர் :** | **அழகுராஜா** | **தொழில்:** | **கிராம நிர்வாக அலுவலர்** |
| **கிராமம்:** | **விராட்டிபத்து** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **மதுரை** | **வயது:** | **46/2023** |

**(எதிரிகள் 1, 3 முதல் 5 ஆஜர். எதிரிகள் 2, 6 ஆஜர் இல்லை. எதிரிகள் 2, 6 தரப்பில் குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.)**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு மேலதிகாரி வட்டாட்சியர் என்றால் சரிதான். நான் வட்டாட்சியருக்கு தான் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். எங்களுக்கு காவல் துறை அழைப்பு என்பது அயல்பணி என்றால் சரிதான். 02.08.2012ம் தேதி நான் கோவானூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருக்கும் போது காலை 09.45 மணிக்கு காவல் துறையிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. எனக்கு 24 மணி நேர அலுவல் உள்ளது என்றால் சரிதான். வருவாய் துறை சம்பந்தப்படாத வேறு துறையிலிருந்து எங்களுக்கு அழைப்பு வருகிறது என்றால் அது சம்பந்தமாக எனது உயர் அதிகாரியிடம் தகவல் சொல்லிவிட்டு தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் எனது உயர் அதிகாரிக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். போன் மூலம் குறிப்பிட்ட இடத்திற்கு வருமாறு காவல் துறை அழைத்ததின் பேரில் நானும் எனது உதவியாளரும் அந்த இடத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். கரும்பாவூர் பேருந்து நிறுத்தத்திற்கு வரச் சொல்லி தான் எங்களுக்கு அழைப்பு வந்தது. கருமபாவூர் விலக்கு பேருந்து நிறுத்தம் என்பது சிவகங்கையிலிருந்து மதுரை செல்லும் சாலையில் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் சித்தலூர் செல்லும் சாலையில் கோவில் குதிரைகளுடன் உள்ளது என்றால் சரிதான். அப்பகுதி மக்கள் அந்தக் கோவிலில் சாமி கும்பிட மொட்டை அடிக்க வருவார்கள் என்றால் சரிதான். நானும் எனது உதவியாளரும் அந்த பேருந்து நிறுத்தத்திற்கு செல்வதுற்கு

முன்பாக காவல் துறையினரும் எதிரிகளும் எவ்வளவு மணிநேரம் நின்று கொண்டிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சித்தலூர் என்பது கோவானூர் குரூப்பை சேர்ந்தது, மெயின் ரோட்டிலிருந்து சித்தலூருக்கு 4 கி.மீ தெற்குபுறமாக செல்ல வேண்டும். எங்கள் அலுவலகத்திலிருந்து கரும்பாவூர் விலக்கு பேருந்து நிறுத்தத்திற்கு செல்வதற்கு அழைப்பிலிருந்து கால் மணிநேரம் ஆனது. சித்தலூர் என்பது கிழமேலாக அமைந்துள்ளது வடக்குபுறம் கண்மாய். மெயின் ரோட்டில் இருந்து தெற்கு புறமாக சென்று சித்தலூரை அடைந்து சித்தலூரில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் இருந்து கிழக்கு புறமாகச் சென்றால் ஊர் அமைந்துள்ளது. சித்தலூரில் பேருந்து நிறுத்தத்தில் இருந்து மேற்கு புறமாக 100 மீட்டர் சென்றால் தென்வடலாக உப்பாறு அமைந்துள்ளது என்றால் சரிதான். பொதுவாக உப்பாற்றில் மழைக்காலத்தில் மட்டுமே தண்ணீர் இருக்கும் என்றால் சரிதான். உப்பாற்றின் கிழமேல் கரைக்கு இடையே உள்ள தூரம் 100 மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். உப்பாற்று எப்பொழுதும் இருபுறமும் திறந்துதான் இருக்கும் யார் வேண்டுமானாலும் வரலாம், போகலாம். நாங்கள் சென்ற தினந்தன்று உப்பாற்றில் தண்ணீர் இல்லை. எடுத்துக் கொடுத்ததாக சொல்லப்படும் சான்று பொருட்கள் அனைத்தும் முட்களின் மேல்புறத்தில் கிடந்தன என்றால் சரிதான். என்னை காவல் துறையினர் இருமுறை விசாரித்தார்கள். ஒப்புதல் வாக்குமூலங்களில் எழுத்தப்பட்டவைகளிலும், அத்தாட்சிகளில் எழுதப்பட்டவைகளிலும் என் முன்பாக எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னை 2வதாக முறையாக 09.08.2012ம் தேதி காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்ட போது தான் அவைகள் அனைத்தும் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 02.08.2012ம் தேதி என்னை காவல் துறையினர் அழைக்கவில்லை என்றும் நான் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கோவனூர் எனது அலுவலகத்திற்கும் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 11 கி.மீ இருக்கும். எங்கள் அலுவலகத்தில் இருந்து சிவகங்கை தாலுகா காவல் நிலையம் சென்று அலுவல் முடித்து மீண்டும் வருவதற்கு அரை தினம் ஆகும் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் இருந்து நான் அயல் பணிக்கு அரை நாள் செல்வதாக இருந்தால் அதை விடுமுறையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல. அயல் பணிக்கு நான் அரை நாள் செல்வதாக இருந்தால் அது குறித்து எனது மேல் அதிகாரிக்கு தெரியப்படுத்தி அனுமதி பெற்றால் மட்டுமே அது அலுவல்

பணியாக கருத்தப்படும். எனது அலுவலகத்தில் அன்றைய தினம் எனக்கு ஆப்செண்ட் போடவில்லை என்றால் சரிதான். அயல் பணிக்கு சென்று வந்த பின்னீடு என்னுடைய மேல் அதிகாரிகளாக வருவாய் ஆய்வாளர் மற்றும் வட்டாட்சியருக்கு எழுத்துப் பூர்வமாக நான் தகவல் சொல்லவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் 02.08.2012ம் தேதி நான் சம்பவம் இடம் செல்லவில்லை என்றும் 09.08.2012ம் தேதி மட்டும் தான் நான் சிவகங்கை தாலுகா காவல் நிலையம் சென்றேன் என்றும் வருவாய் துறைக்கு காவல் துறையின் உதவி தேவைப்படும் என்பதால் காவல் துறையினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இது போல் இதற்கு முன்பாக காவல் துறையினர் அழைத்து நான் அயல் பணிக்கு எதற்கும் நான் செல்லவில்லை. அதனால் தான் எனக்கு ஒப்புதல் வாக்குமூலம் என்பதும் கைப்பற்றுதல் மகஜர் என்ன என்று தெரியாது என்றும் காவல் துறையினர் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் இது போல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.121/2015**

**வழக்கு சாட்சி: PW.10**

**தேதி: 10.10.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **அம்சவள்ளி** | **ஜாதி:** | **பறையர்** |
| **கணவர் பெயர் :** | **மருது** | **தொழில்:** | **கிராம உதவியாளர்** |
| **கிராமம்:** | **படமாத்தூர்** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **சிவகங்கை** | **வயது:** | **45/2023** |

**(எதிரிகள் 1, 3 முதல் 5 ஆஜர். எதிரிகள் 2, 6 ஆஜர் இல்லை. எதிரிகள் 2, 6 தரப்பில் குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.)**

**முதல் விசாரணை:**

நான் சிவகங்கை தாலுகா கோவானூர் குரூப் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.08.2012ம் தேதி காலை 9.30 மணியளவில் நான் கோவனூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் பணியில் இருந்தேன். என்னுடன் கிராம நிர்வாக அதிகாரியும் பணியில் இருந்தார். கிராம நிர்வாக அதிகாரிக்கு சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் இருந்து போன் வந்தது. காவல் ஆய்வாளர் சித்தலூரில் ஒரு கொலை நடந்து விட்டதாகவும் அது சம்பந்தமாக சாட்சியாக வரும்படி அழைப்பதாகவும் கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் கூறினார். கிராம நிர்வாக அதிகாரியுடன் அவரது இருசக்கரா வாகனத்திலேயே கரும்பாவூர் விலக்கிற்கு நாங்கள் சென்றோம். அங்கு ஆய்வாளர் மற்றும் காவல் துறையினர் இருந்தார்கள். நானும் கிராம நிர்வாக அதிகாரியும் சென்றோம். அங்கு எதிரிகள் செல்லத்துரை மற்றும் அழகுமலை ஆகியோர்கள் இருந்தார்கள். அவர்களை எங்கள் முன்பாக ஆய்வாளர் விசாரணை செய்தார். சித்தலூர் உப்பாற்றின் மேற்கு கரையில் ஒரு இரும்பு கம்பியை மறைத்து வைத்திருப்பதாக எதிரி செல்லத்துரை கூறினார்.

அந்த இரும்பு கம்பியை எங்கள் முன்பாக எடுத்து ஆஜர் செய்தார்கள். அங்கு வெள்ளை பேப்பரில் எங்கள் முன்பாக எழுதினார்கள். முதலில் கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்து செய்தார். அதன் பின்னீடு நான் கையெழுத்து செய்தேன். அன்றிலிருந்து ஒரு வாரம் கழித்து 9ம் தேதி நாங்கள் கோவானூர் அலுவலகத்தில் அரசு பணியில் இருக்கும் போது சிவகங்கை தாலுகா காவல் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலருக்கு போன் செய்து எங்களை தாலுகா காவல் நிலையத்திற்கு வரச் சொல்லி அழைத்தார்கள். நான் கிராம நிர்வாக அலுவலருடன் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு எதிரிகள் மகாதேவன், பஞ்சவர்ணம், ராஜ்குமார் மற்றும் புதுக்குளம் முத்துப்பாண்டி ஆகியோர்கள் இருந்தார்கள். எங்கள் முன்னிலையில் காவல் துறையினர் அவர்களை விசாரித்தார்கள். மகாதேவன் சித்தலூரில் உப்பாற்றின் மேற்கு கரையில் ஒரு வேல் கம்பையும், கத்தியையும் மறைத்து வைத்திருப்பதாக கூறினார். நாங்கள் சித்தலூர் உப்பாற்றிற்கு சென்றோம். அங்கு வேல் கம்பையும், கத்தியையும் எடுத்து மகாதேவன் ஆஜர் செய்தார். அங்கு ஸ்டேட்மென்ட் எழுதப்பட்டது அங்கு கிராம நிர்வாக அலுவலரும் நானும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அசாஆ.5, 10 மற்றும் அசாஆ.11ல் 2வதாக நான் கையெழுத்து செய்துள்ளேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் விசாரிக்க நடந்த விபரங்களை கூறினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நானும் கிராம நிர்வாக அதிகாரியும் கரும்பாவூர் பேருந்து நிறுத்தத்திற்கு செல்வதற்கு முன்பாக எவ்வளவு நேரமாக காவல் துறையினர் அங்கு இருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. அதே போல் 9ம் தேதி நாங்கள் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திற்கு சென்ற போது அங்கு எவ்வளவு நேரமாக எங்களுக்கு முன்பாக எதிரிகள் அங்கு இருந்தார்கள் என்று எங்களுக்கு தெரியாது. சித்தலூர் உப்பாறு என்பது திறந்தவெளியாகும். ஊர்மக்கள் யார் வேண்டுமானாலும் போகலாம், வரலாம். நாங்கள் உப்பாற்றின் மேற்கு பக்கம் கரை முட்புதருக்கு சென்றோம். எங்களுடன் காவல் துறை அதிகாரிகளும், எதிரிகளும் வந்தார்கள். சான்று பொருட்கள் முட்புதரில் மேல் பக்கம் கண் பார்வையில் தெரியும் படி கிடந்தன என்றால் சரிதான். அத்தாட்சிகளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது.

கிராம நிர்வாக அதிகாரி கையெழுத்து செய்தார். நானும் கையெழுத்து செய்தேன். நான் சொல்வது போல் உப்பாற்றில் வைத்து எதுவும் எழுதப்படவில்லை என்றும் அவைகள் காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதப்பட்டன என்றும் சொன்னால் சரியல்ல.